**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

எனது மகளுக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெறுவதற்கு முன்பு இரு வீட்டாரும் அருகருகே உள்ளவர்கள் என்றால், அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எதிர்மனுதாரர் வீடு வாடகை வீடாகும். எனது வீடு சொந்த வீடாகும். எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்களுக்கு ஒரே மகனாவர். எனக்கு 1ஆம் மனுதாரர் மற்றும் ஒரு மகன் உள்ளார். எனது மகன் திருமணமாகி தனியாக வசித்து வருகிறார். எனது மகன் IT படித்து IT Company இல் வேலை செய்து வருகிறார். எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு 70 வயதும், தாயாருக்கு 65 வயது இருக்கும்.

2) எதிர்மனுதாரரின் தாயாருக்கு முதுகு தண்டுவடத்தில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால், சரியல்ல. எதிர்மனுதார் திருமணத்திற்கு முன்பு குவைத் நாட்டில் வேலை பார்த்து வந்தார். திருமணம் முடிந்து 45 நாட்கள் கழித்து மீண்டும் குவைத் நாட்டிற்கு சென்றார். 2020 இல் இருந்து எதிர்மனுதாரர் நிரந்தரமாக உள்ளூரிலேயே வசித்து வருகிறார் என்று சொன்னால், சரிதான். எதிர்மனுதாரர் குவைத் நாட்டிலிருந்து எதற்காக இங்கே வந்தார் என்றால், விவாகரத்து கொடுத்துவிட்டு எதிர்மனுதாரர் சென்றுவிட்டதால், நாங்கள் வரவழைத்தோம்.

3) எதிர்மனுதாரர் தானாக வேலையை விட்டு வரவில்லை என்றாலும், நாங்கள்தான் வரவைத்தோம் என்று சொன்னாலும், சரிதான். எதிர்மனுதாரர் டீக்கடையில் வேலை பார்த்து வருகிறார் என்று சொன்னால், இல்லை. அவர் ரெஸ்டாரன்ட் வைத்திருந்தார். தற்சமயம் ஆவின் பால் மற்றும் ஐஸ் கிரிம் கடை வைத்துள்ளார். எனது மகள் விவாகரத்து வழக்கில் எதிர்மனுதாரர் டீக்கடையில் வேலை பார்த்து வருவதாக ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால், சரிதான். நான் அதற்கு மாறாக தற்சமயம் ஆவின் பால் கடையும், ஐஸ் கிரிம் கடையும் நடத்திவருவதாக கூறுகிறேன் என்று சொன்னால், சரியல்ல.

4) திருமணத்தின்போது எனது மகளுக்கு செய்த நகைகளை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றால், மொத்தம் 45 பவுன் நகையில், எனது மகளுக்கு அணிவித்த 35 பவுன் நகையை டி.என்.எஸ்.தேவர் மூலம் பெற்றுக்கொண்டோம். நான் சொல்லும் மீதி நகையையும் சீர் வரிசை பொருட்களையும் கேட்டு விவாகரத்து வழக்கில் எனது மகள் மனு செய்துள்ளார் என்று சொன்னால், சரிதான். எதிர்மனுதாரர் அந்த மனுவிற்கு அவரிடம் உள்ள நகை மற்றும் சீர் வரிசை பொருட்களை கொடுக்க தயாராக உள்ளார் என்று பதில் எழுதி தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

5) எனது மகள் கடந்த 4-5 வருடங்களாக திருமாங்கள்யமும் (தாலி), மெட்டியும் அணியவில்லை என்றால், இல்லை. கடந்த மூன்று வருடங்காளகத்தான் அணியவில்லை. திருமணம் முடிந்து 45 ஆவது நாள் எதிர்மனுதாரர் குவைத் நாட்டிற்கு சென்றார் என்றால், சரிதான். எதிர்மனுதாரர் சென்ற இரண்டாவது நாளில் எனது மகள் எனது வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால், இல்லை. திருமணமாகி ஏழு மாதம் கழித்துதான் வந்தார்.

6) நான் பொய்சொல்லிகிறேன் என்றாலும், திருமணமாகி 2 ஆவது நாளில் எனது மகள் எனது வீட்டிற்கு வந்துவிட்டார் என்று சொன்னாலும், சரியல்ல. எனது மகளுக்கு எனது வீட்டில்தான் வளைகாப்பு நடத்தினேன். அந்த வளைகாப்பிற்கு எதிர்மனுதாரருக்கோ, அவரது குடும்பத்தினருக்கோ தகவல் சொல்லவில்லை என்று சொன்னால், எதிர்மனுதாரரின் பெற்றோருக்கு தகவல் சொன்னோம். எதிர் மனுதாரருக்கு தகவல் சொல்லவில்லை. நான் பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது மகளை பிரசவத்திற்காக மருத்துவமனைக்கு அழைத்து சென்றதை எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோரிடம் தகவல் சொல்லவில்லை என்று சொன்னால், சொல்லவில்லை. குழந்தை பிறந்த பிறகுதான் தகவல் சொன்னோம் என்று சொன்னால், சரிதான்.

7) எதிர்மனுதாரரின் பெற்றோர் மருத்துவமனைக்கு வந்திருந்தனர் என்று சொன்னால், காலை 09.00 மணிக்கு குழந்தை பிறந்ததற்கு மதியம் 03.30 மணிக்கு வந்தனர். எதிர்மனுதாரர் குழந்தையை

பார்ப்பதற்கு வெளிநாட்டிலிருந்து வந்தார் என்றால், மூன்றாவது நாளில் வந்தார். அந்த சமயம் மருத்துவமனையில் சண்டை ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால், சரிதான். எதிர்மனுதாரர் 1ஆம் மனுதாரரை எதிர்மனுதாரரின் தாய், தகப்பனார் வீட்டிற்கு போ என்று சொல்லிவிட்டு வெளிநாட்டிற்கு மீண்டும் சென்றுவிட்டார் என்று சொன்னால், சரியல்ல. குழந்தையையும் தூக்கவில்லை.

8) ஆறு வருடங்களாக எனது மகள் எனது வீட்டில் வசித்து வருகிறார். எனது மகள் சேர்ந்து வாழ வேண்டும் என்று சட்டப் பூர்வமான நடவடிக்கை எதுவும் நாங்கள் எடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. எனது மகள் சேர்ந்து வாழ வேண்டும் என்று சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுத்தற்கான ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. கொடுத்துள்ளோம். நான் பொய் சொல்கிறேன் என்றாலும், சேர்ந்து வாழ எனது மகளுக்கு விருப்பமில்லாததால்தான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல.

9) எனது முதல் விசாரணையில் சீர் சாமான்கள் பத்து இலட்சமும், திருமண செலவு ஆறு இலட்சமும் செய்ததாக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. திருமணச் செலவினை இரு வீட்டாரும் சரிபாதி செய்துகொண்டோம் என்று சொன்னால், சரியல்ல. எதிர்மனுதாரரின் பெற்றோர் சமூக வழக்கப்படி திருமணச் செலவினை பெண் வீட்டார்தான் முழுவதும் செய்வார்கள் என்று சொன்னதால், நாங்கள்தான் முழுவதும் செய்தோம். நான் பொய் சொல்கிறேன் என்றாலும், எதிர்மனுதாரரின் பெற்றோர் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், திருமணச் செலவினை பாதி செய்தார்கள் என்று சொன்னாலும், சரியல்ல.

10) எதிர்மனுதாரரின் பெற்றோரும், அவரது சகோதரிகளும் எனது மகளை கொடுமை செய்ததாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. எதிர்மனுதாரரின் திருமணமான சகோதரி எதிர்மனுதாரரின் வீட்டில் தங்கியிருந்தார் என்று சொன்னால், சரியல்ல. எனது மகளுக்கு திருமணம் நடப்பதற்கு நான்கு வருடங்களுக்கு அவரது படிப்பினை முடித்துவிட்டார் என்று சொன்னால், சரிதான். எனது மகள் படிக்கும்போது வேறு யாருடனோ பழகியதாக சொல்லி கொடுமை செய்யததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. எனது மகளை அடித்துவிட்டதாக எனது மகள் கொடுத்ததாக புகாரின் பேரில் இதே நீதிமன்றத்தில் குற்ற வழக்கு நடந்தது என்றால், சரிதான். அவ்வழக்கிலிருந்து எதிர்மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று சொன்னால், சரிதான். அந்த தீர்ப்பின் பேரில் நாங்கள் மேல் முறையீடு செய்துள்ளோம்.

11) நான் பொய்சொல்கிறேன் என்றாலும், அவ்வாறு மேல்முறையீடு செய்திருந்தால் அந்த வழக்கு விபரங்களை கொடுத்திருப்பேன் என்று சொன்னாலும், சரியல்ல. எனது முதல் விசாரணையில் எதிர்மனுதாரரும், அவரது பெற்றோர் மற்றும் சகோதரிகள் எனது மகளை கொடுமை செய்ததாக கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய் என்றால், சரியல்ல. அதனால்தான் நான் சொல்லியுள்ளது சம்மந்தமாக காவல் நிலையத்தில் எவ்வித புகாரும் அளிக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. எனது மகள் ஜீவனாம்சம் கேட்டுதான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

12) எனது மகள்தான் எதிர்மனுதாரரின் சேர்ந்து வாழ மறுப்பதாலும், வெளிநாட்டில் வேலை பார்தவரை நாங்கள் இங்கு வரவழைத்து சரியான வேலை இல்லாமல் இருந்துவருவதாலும், நான் சொந்த வீட்டில் வசதி வாய்ப்புடன் வசித்து வருவதாலும், எனது மகள் கோரும் ஜீவனாம்ச தொகையை எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவரில்லை என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.